# மண்முனைப் பற்று பிரதேச செயலகப் பிரிவின் தொல்லியல் மூலங்களையும் வாழ்வியல் அம்சங்களையும் ஆவணப்படுத்தல்

EXAMINATION UNIT
FACULTY OF ARTS AND CULTURE
21 JAN 2019
Eastern University, Sri Lanka.

பெயர் : நிரோஜினி ஜெயராசா

பதிவு இலக்கம் : EU/ IS/ 2012/ AC/ 87

சுட்டெண் : CS 4957

LIBRARY
07 SEP 2019
EASTERN UNIVERSITY, SRI LANKA.

இவ்வாய்வுக் கட்டுரையானது இளங்கலைமாணி வரலாறு சிறப்புக் கற்கை நெறியின் இறுதி வருட பரீட்சையின் ஓர் அங்கமாக கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

FAC684
Project Report
Library - EUSL

வரலாற்றுத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை

2018.

# முன்னுரை

இலங்கைத் திருநாடு தனக்கே உரித்தான தொடர்ச்சியான வரலாற்றையும், பண்பாட்டையும் கொண்டு காணப்படுகிறது. ஈழத்துப் பண்பாடுகளோடு பிற நாட்டுப் பண்பாடுகள் கலப்புற்று, பல நாட்டுப் பண்பாடுகளோடு இணைந்த வகையில் ஈழத்தின் பண்பாடும், வரலாறும் கட்டியெழுப்பப்பட்டது. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் பரவிய போது கூடவே வரலாற்றைப் பேணும் மரபும், புதிய பண்பாடும் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதாக பாளி இலக்கியங்களில் கூறப்பட்டாலும், அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் நாகரிகமடைந்த பண்பாட்டு வரலாறு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவை இலங்கைப் பண்பாட்டு வரலாற்றில் புதிய பரிணாமத்தையும் திருப்பத்தையும் தோற்றுவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கிழக்குப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டம் கடல் சார்ந்த பரந்துபட்ட பிரதேசமாக அமைந்துள்ளமையினால் ''மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் தொல்லியல் மூலங்களையும் வாழ்வியல் அம்சங்களையும் ஆவணப்படுத்தல்'' எனும் தலைப்பின் கீழ் மண்முனைப்பற்று பிரதேசத்தை மட்டும் மையப்படுத்தியதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இப்பிரதேசம் தொடர்பில் இலக்கிய குறிப்புக்கள் அதிகம் காணப்படாவிடினும் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் சில இடங்களில் இப்பிரதேசம் குறித்த தகவல்களை கூறுவதைக் காணலாம்.

இவ்வாய்வின் போது இப்பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட, கட்டட இடிபாடுகள், ஐரோப்பியர் கால கட்டுமானங்கள், வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்கள், மக்களின் பாவனைப் பொருட்கள், வாழ்வியல் அம்சங்கள், பாரம்பரிய வரலாற்றுச் சின்னங்கள் என்பன இப்பிரதேசத்தினது தொன்மையான வரலாற்றையும், பண்பாட்டையும் வெளிப்படுத்தி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான தொல்லியல் சின்னங்கள் தற்போதைய காலங்களில் இனமத உணர்வுகளுக்குட்பட்டு மறைக்கப்பட்டு, சிதைக்கப்படும் நிலையே காணப்படுகின்றது.

எமது பிரதேசத்தின் வரலாற்றை வெளிப்படுத்தி நிற்கின்ற இத்தொல்பொருட் சின்னங்களை ஆய்வுக்குட்படுத்தி, ஆவணப்படுத்தும் ஓர் ஆரம்ப முயற்சியாகவே இவ்வாய்வானது அமைகின்றது. எதிர்காலத்தில் இது போன்ற ஆய்வு முயற்சிகளில் ஈடுபட இருக்கும் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு ஓர் வழிகாட்டலாக இவ்வாய்வு அமையும் என நம்புகின்றேன்.

-ஆய்வாளர்.

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | i |
| நன்றியுரை | ii |
| அத்தியாயம்: 01 ஆய்வு அறிமுகம் | 01 - 08 |
| அத்தியாயம்: 02 தொல்லியல் சான்றுகள் | 08 - 28 |
| அத்தியாயம்: 03 வாழ்வியல் மூலங்கள் | 29 - 79 |
| அத்தியாயம்: 04 தொகுப்புரை | 80 - 82 |
| உசாத்துணை நூல்கள் | 83 - 86 |
| பின்னிணைப்பு | iv - v |